**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.110/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : குமரேசன் |
| Father's Name/ Husband's Name | : பச்சையப்பன் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Age | : 58 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026**

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது செஞ்சி கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. மருதப்பன் என்பவரின் கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 22.07.2019 அன்று செஞ்சி கா.நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. மருதப்பன் என்பவர் பணியில் இருந்த போது அ.சா.1 பணக்காரச்சி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 417/2019 இதச பிரிவுகள் 294(பி), 323, 427, 354, 506(i)–ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ–2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அவர் அன்றைய தினமே மதியம் 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜ்குமார், சசிகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.3 மற்றும்4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் பணக்காரச்சி, குருநாதர், சசிகுமார், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகளை தேடி புலன் வைத்தபோது எதிரிகள் அனைவரும் முன் பிணை பெற்று பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.2(குருநாதர்)–ற்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம மருத்துவர் திரு. ஆனந்த் என்பவரை விசாரித்து அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றுள்ளார். மேற்படி காயச் சான்றில் அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று கூறி சான்று வழங்கியுள்ளார். **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு சாட்சி சசிகுமார் என்பவரது லைட்டுகளை எதிரியானவர்கள் சேதப்படுத்தவில்லை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 323, 427, 354, 506(i) இ.த.ச – வை 294(பி), 323, 354, 506(i) இ.த.ச என பிரிவு மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(அசாஆ 5 ஆனது அரசு வழக்கறிஞர் முலம் குவிமுச 294(1) மற்றும் 294(3) படி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மையில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குறியீடு செய்யப்பட்டது. )

பின்பு அவர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354, 506(i) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கின் சாட்சிகளை எனக்கு தெரியாது என்றாலும்,

அவர்களை நான் இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2 இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் மீது வழக்கு தொடுக்கப்பட்டு அதில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றால் அது விவரம் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.